**திவிநெகும நுண் நிதி எழுதுகருவிகள் சுழற்சி நிதியம் - 2015**

---

திவிநெகும மைக்ரோ நிதி எழுதுகருவிகள் சுழலும் நிதியத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதநிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 இன் 01 ஆம் இலக்க திவிநெகும அதிகாரச் சட்டத்தின் 45 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மேற்படி நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

**2. நிதிக்கூற்றுக்கள்**

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்களானவை திவிநெகும மைக்ரோ நிதி எழுதுகருவிகள் சுழலும் நிதியத்தின் 2015 திசெம்பர் 31 இல் இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 இலங்கைப் பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நியம இலக்கம் 02 இன் பிரகாரம் காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்படாமையுடன் அது சம்பந்தமாகப் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் இருப்புப் புத்தகத்தின் மிகுதியை விட அதிகமாகக் காணப்பட்ட ரூபா 780,879 ஆன இருப்பு செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் காசு உட்பாய்ச்சலாகவும், 2014 ஆம் வருடத்தின் இருப்பு இழப்பீடு ரூபா 737,567 ஆனது மீளாய்வாண்டில் இலாபத்திலிருந்து நீக்கப்பட்டமை செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் காசு வெளிப்பாய்ச்சலாகவும் காசுப் பாய்ச்சல் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருந்தன.

(ii) மீளாய்வாண்டின் மாவட்டச் செயலகங்களின் பெற வேண்டிய தொகையின் கீழ் காசு வெளிப்பாய்ச்சல் ரூபா 8,380,417 என்பதுடன் அது ரூபா 7,616,783 ஆகக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) நியம இலக்கம் 07 இன் பிரகாரம் சொத்துக்களுக்குச் சமமான மதிப்பீட்டில் தேய்மானம் ஒதுக்கப்படும் போது அச்சொத்தின் தக்க வைப்பு மதிப்பு தீர்மானிக்கப்பட்டு கணக்கில் எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். எனினும். முழுமையாகத் தேய்மானமிடப்பட்ட ரூபா 119,962 பெறுமதியான அலுவலக உபகரணங்கள் தொடர்பாக இதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

**2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மாவட்டச் செயலகங்களின் காலாண்டு அறிக்கைகளின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியில் அக்களஞ்சியசாலைகளில் காணப்பட்ட ரூபா 12,725,122 ஆன மிகுதி

இருப்புக்குரிய இணக்கப்பாடத இலாபம் ரூபா 1,156,829 ஆக இருந்த போதிலும் வங்கிச் சமூகங்களுக்கு விற்கப்பட்ட எழுதுகருவிகள் உட்பட மாவட்டச் செயலகங்களின் பெற வேண்டிய ரூபா 34,057,486 ஆன மொத்த தொகைக்கான இணக்கப்படாத இலாபம் ரூபா 3,096,135 ஆகக் கணக்கிடப்பட்ட காரணத்தினால் அது ரூபா 1,939,306 ஆல் அதிகமாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. முன்னைய வருடத்தில் இந்தக் கொள்கை நடைமுறைப்படுத்தப்பட்ட காரணத்தினால் வருட ஆரம்பத்தில் இணக்கப்படாத இலாபமானது ரூபா 939,425 ஆல் அதிகமாக சீராக்கப்பட்டிருந்தது. இதன் காரணத்தினால் எழுதுகருவிகள் விற்பனை இலாபம் ரூபா 999,881 ஆல் குறைத்து நிதிச் செயலாற்றல் கூற்றில் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) ரூபா 80,500 பெறுமதியான மறுக்கப்பட்ட காசோலைகள் கணக்கிடப்படும் போது முன்னைய வருடத்தில் ஏற்பட்ட தவறுகளைத் திருத்திய போது சரியான கணக்குகளுக்கு உட்படுத்தாமை காரணமாக மீளாய்வாண்டின் மிகை ரூபா 71,404 மற்றும் நடைமுறைப் பொறுப்புக்கள் ரூபா 1,778 ஆல் அதிகமாகவும், நடைமுறைச் சொத்துக்கள் ரூபா 80,500 ஆல் குறைத்தும் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருந்தன.

### 2.2.3 கணக்காய்விற்கான சான்றுகள் இல்லாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் இருப்புப் பதிவேட்டின் பிரகாரம் மிகுதி ரூபா 25,548,198 என்பதுடன் பௌதீக இருப்பு கணிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் மிகுதி ரூபா 26,089,772 ஆனது நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்ட காரணத்தினால் வேறுபாடான ரூபா 541,573 ஆனது சரியாக இனங்காணப்படாது இலாபமாக சீராக்கப்பட்டிருந்தது. எனினும், ரூபா 1,067,714 பெறுமதியான இருப்பானது இருப்புப் பதிவேட்டில் உள்ளடக்கபடாமை, இருப்புப் பெறுமதி ரூபா 287,044 குறைவாக இருப்பு பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டமை மற்றும் பயன்படுத்தப்படாத ரூபா 871,055 ஆன இருப்பு இறுதி இருப்பில் உள்ளடக்கப்பட்ட காரணத்தினால் இருப்பு பதிவேட்டின் பிரகாரம் இறுதி இருப்பு மிகுதியின் சரியான தன்மை கணக்காய்வின் போது உறுதிப்படுத்தப்படவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் காலாண்டு அறிக்கையின் பிரகாரம் மாவட்டச் செயலகங்களுக்கு ரூபா 40,607,082 ஆன இருப்புக்கள் விநியோகித்தமைக்கான கடன்பட்டியல் பத்திரங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

### 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிச மக்கள் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை நிதிப்பிரமாணம் 763. | அலுவலகர்களை வழிநடாத்துதல் மற்றும் கழிவுகளைக் குறைப்பதன் மூலம் இருப்புக் கட்டுப்பாட்டை செயற்திறன் மிக்கதாகப் பேணுவதற்கான களஞ்சியசாலை விதிகள் முறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஆ) | 2006 இன் அரசப் பெறுகை வழிகாட்டிக் கோவையின் 5.4.12 ஆம் வழிகாட்டி | பெறுமதி சேர்க்கப்பட்ட வரியானது செலுத்தப்பட்ட பின்னர் அடுத்து வரும் மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன்னர் அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டுமாயினும், மீளாய்வாண்டில் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த வட் வரி ரூபா 5,788,958 ஆன பெறுமதி தொடர்பாக குறிப்பிட்ட அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை. |
| (இ) | 2006 திசெம்பர் 22 ஆந் திகதிய பீஎப்/423 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | |
| (i) | 3.3 (ஆ) பந்தி | நிதியம் சட்ட ரீதியாக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. மேலும் நிதியம் பேணப்பட்டு வருவதற்கான விதிமுறைகள் அறிமுகப்படுத்துவதற்கு மற்றும் முகாமைத்துவச் சபை ஒன்றை நியமிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படாது வங்கி முகாமைத்துவச் சபையின் கீழ் நிதியம் பேணப்பட்டு வருகின்றது. |
| (ii) | 4.4(அ)பந்தி | நிதியத்தின் வருடாந்த நிதிக் கூற்றுக்கள் மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை உள்ளடங்கிய வருடாந்த அறிக்கை நிதியாண்டு முடிவடைந்த 05 மாதங்களுக்குள் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2014 ஆம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. |

### 2.4 பெறவேண்டிய கணக்கு

இலங்கை சலுசலா நிறுவகத்திற்கு உரித்தான களஞ்சியத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த காகிதாகிகள் இருப்பு 2010 ஆம் ஆண்டில் நீக்கப்பட்டிருந்ததுடன் ஆனால், அதற்காக செலவிடப்பட்ட களஞ்சிய சாலைக்கான வாடகை வைப்பு ரூபா 1,454,112 ஆனது மீண்டும் அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதியத்தின் நிதி விளைவு ரூபா 6,865,974 ஆன மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 4,285,574 ஆனதுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 2,580,400 ஆன முன்னேற்றமொன்று காட்டப்பட்டிருந்தது. இம்முன்னேற்றத்திற்கு நிதியத்தின் வருமானம் உயர்வடைந்தமையே பிரதான காரணமாக இருந்தது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2006 திசெம்பர் 22 ஆந் திகதிய பீஎப்/423 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள் கணக்காண்டு முடிவடைந்து 02 மாதத்திற்குள் திறைசேரியின் அரச நிதித் திணைக்களத்திற்குப் பிரதியுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்கள் 04 வருட கால தாமதத்தின் பின்னரே கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டது.

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 133 இன் பிரகாரம் நிதியத்தின் நடவடிக்கை சம்பந்தமாக திணைக்களத்தின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் கணக்காய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 4.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

2006 திசெம்பர் 22 ஆந் திகதிய பீஎப்/423 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் நிதியத்தின் 4.1 ஆம் பந்தியின் பிரகாரம் நிதியத்தின் அலுவல்கள் சம்பந்தமாக வரவு செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டிலான குறைபாடுகள் தொடர்பாக காலத்திற்குக் காலம் பணிப்பாளர் நாயகத்தின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்த போதிலும், உள்ளகக் கட்டுப்பாடு முறைமைகளை நிறுவி கணக்குப் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை முறையாக பேணிச் செல்வதற்கான விசேட கவனம் கோரப்படுகின்றது.